*1973 நவம்பர் 21]*

because they are here. Will the Hon. Minister for Education allot some more funds and give them financial aid to Telegu and other minority language Pandits so that they may get encouragement and write more books and publish them?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ்மொழிக்கு ஊக்கம் அளிக்கும்வகையில் அந்த மொழியில் நூல் எழுதுபவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. மற்ற மொழிகளைப்பற்றி அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. ஆனல் அந்தந்த மாநிலங்களில் அந்தந்த மொழிக்கான உதவி செய்யும் வகையில், கேரளத்தில் மலையாள மொழிக்கும், கர்நாடக மாநிலத்தில் கன்னட மொழிக்கும், ஆந்திரத்திலே தெலுங்கு மொழிக்கும், மற்றபடி இந்தி மொழிக்கும், மராட்டிய மொழிக்கும் அந்தந்த மாநிலங்களில் அதற்கு ஊக்கம் தந்து வருகிறார்கள். ஆனல் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ்மொழியிலே எழுதுபவர்களுக்கு இப்பொழுது இருக்கும் திட்டம் இருக்கிறது. சிறுபான்மை மொழிகளைப்பற்றி இதுவரையில் திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, according to the census in our State, in addition to Tamil writers, there is the Telugu language which is the language of the second minorities. May I know whether the Hon. Minister will consider the cases of Telugu writers also? Because, there are many Telugu writers of Andhra staying in our State and therefore, will the Hon. Minister give incentive to Telugu and Malayalam writers also?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்பொழுது அதுபற்றி திட்டம் இல்லை. விண்ணப்பம் ஏதேனும் வந்தால் அதைப்பற்றி பரிசீலிக்கப்படும்.

*Malayalam Teachers Training School at Vilavancode*

* 253 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. Minister for Education and Tourism be pleased to state whether the Government Malayalam Teachers Training School at Vilavancode has been closed from this year?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். தேவைக்கு மேலாகவே பயிற்சி பெற்ற மலையாளம் ஆசிரியர்கள் இருப்பதால், இப் பயிற்சிப் பள்ளி மூடப்பட்டுள்ளது.

[1973 நவம்பர் 21

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, மலையாள சிறுபான்மையினர் அதிகமாக அந்தப் பகுதியில் இருப்பதால் அவர்கள் இன்னும் அந்தப் பயிற்சிப் பள்ளி தேவை என்று அரசாங்கத்திற்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அதுபற்றி புனராலோசனை செய்வதற்கு அரசு முன்வருமா? அப்படி மலையாள ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் துவக்க முடியா விட்டாலும் அதைத் தமிழ் பயிற்சிப் பள்ளியாகவாவது மாற்ற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தமிழ் பயிற்சிப் பள்ளியைப் பொறுத்தவரையில் ஏராளமான வர்கள் வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். குறிப் பாக குமரி மாவட்டத்தில் மற்ற மாவட்டங்களைவிட அதிகமாக இருக்கிறார்கள். மேலும் மலையாள ஆசிரியர்களும் தேவைக்கு மேலாகவே இருக்கிறார்கள். அத்துடன் குமரி மாவட்டத்தில் ஏற்கனவே மலையாள மொழி எடுத்தவர்களின் நிலைமை மாறி தமிழையே பாடமொழியாக எடுக்கும் மாணவர்கள் அதிகமாகி யிருக்கிறார்கள். ஆகவே, மலையாள மொழி எடுத்தவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்றும், அதனால் அந்தப் பள்ளி மூடப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும் கூறப் படுகிறது. எந்தக் கட்டத்திலேனும் மலையாளத்தில் போதுமான வர்கள் இல்லாதிருந்தால் தேவைப்படுகிற அந்தச் சமயத்தில் புதுப் பித்துக் கொள்வதற்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இப்பொழுது தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, இந்த மலையாளம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மூடப்படுவதற்கு நம்முடைய மாண்பு மிகு கல்வியமைச்சரவர்கள் போதுமான ஆசிரியர்கள் இருப்ப தாகக் காரணம் காட்டினார்கள். அதே நேரத்தில் மற்ற ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமாக இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். ஆகவே, முன்புபோல இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளையும் மூடும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இரண்டு மூன்று ஆண்டுக் காலமாகவே பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கையை ஓரளவு குறைத்துக் கொண்டு வந்திருக்கிறோம்,

பிரிவுகளைக் குறைத்துக்கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கனவே இரண்டு இரண்டு செக்ஷன் என்றிருந்தது. இப்பொழுது ஒரு செக்ஷன் என்று வருகிறது. 40 மாணவர்கள் சேர்க்கப்பட்ட இடத்தில் இப்பொழுது 30 மாணவர்களைச் சேர்க்கிறார்கள். ஒரு சமயத்தில் மாணவர்களைச் சேர்க்காத நிலையும் இருந்தது. ஆனால் இந்த ஆண்டு எல்லாப் பயிற்சிப் பள்ளிகளுக்கும் ஒரு பிரிவு தரப் பட்டு, 30 பேர்களைத்தான் சேர்க்க வேண்டுமென்று சொல்லி ஆறாயிரத்து சில்லறை, ஏழாயிரத்துச் சில்லறை பேர் பயிற்சி பெற்ற இடத்தில் இப்பொழுது 3,000 பேர்களைத்தான் சேர்க்க வேண்டுமென்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஐந்தாறு ஆண்டுகளில் நிலைமை எப்படியிருக்கும் என்று தெரியாத காரணத் தினால் ஓரளவு குறைவானவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது.

*Technical High Schools*

* 254 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) the places where Technical High Schools are located at present; and

(b) the number of students taken in them for the year 1972–73?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) விரிவான அறிக்கையொன்று @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இந்த விவர அறிக்கையில் ஒவ்வொரு பள்ளியிலும் 60 பேராவது குறைந்தது இருக்க வேண்டு மென்று இருந்தும்கூட, கோயம்புத்தூர், நாகர்கோவில், தூத்துக்குடி, காரைக்குடி, குடியாத்தம் போன்ற இடங்களில் 60-க்கும் மிக மிகக் குறைவாக சேர்க்கப்பட்டிருக்கிறதே, அதற்கு ஏதேனும் விசேஷ காரணங்கள் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவாவர்களே, விண்ணப்பம் செய்தவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதால் குறைந்திருக்கிறது. ஆனால் அதிகமாக விண்ணப்பங்கள் வந்தால் 60 பேர்கள் வரையில் சேர்ப்பதற்கு வாய்ப்பிருக்கிறது.

---

@ 432-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.